IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**MCOP.No.223/2021**

**நாள்– 31.01.2024**

**மதியழகன்**

**ம.சா.1** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

காவல் நிலையத்தில் நான் புகார் அளிக்கவில்லை. போலீசார் என்னிடம் எழுதிக்கொண்டு கையெழுத்து கேட்டார்கள். வெற்றுத்தாளில் நான் கையெழுத்திட்டு கொடுக்கவில்லை. முதல் தகவல் அறிக்கையில் நான் எனது மகனுடன் கூலி வேலை செய்வதாகக் கூறப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். மனுவில் கோத்ரேஜ் நிறுவனத்தில் வேலை பார்ப்பதாகக் கூறியதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்திருக்கும் ம.சா.ஆ.13 என்னுடைய புகைப்படங்கள் தான். முதல் புகைப்படம் சிசிடிவி புட்டேஜை புகைப்படம் எடுத்து தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். விபத்து நடந்ததாகக் கூறும்இடத்தில் இருந்து மார்க்கெட்டிற்கு செல்லும் ரோடு வளைவான ரோடு என்றால் சரிதான். விபத்து நடந்ததாகக் கூறும்இடம் மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதி என்றால் சரிதான். இந்த புகைப்படத்தில் என் மீது மோதியதாகக் கூறும் வாகனம் வேகமாக வந்ததாக துலங்காது என்றால் சரிதான். விபத்து நடந்ததாகக் கூறும் இடத்தில் நான் சென்றாலோ, அல்லது எதிர்மனுதாரர் சென்றாலோ வேகமாக வாகனத்தை ஓட்ட இயலாது என்றால் சரிதான். விபத்து 05.30 மணிக்கு நடந்தது. அன்றைய தினம் 8–9 மணியளவில் திருநெல்வேலி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். கடையநல்லூரில் பார்க்க இயலாது என்று கூறியவுடன் திருநெல்வேலி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். ஹைகிரவுண்ட் மருத்துவமனைக்கு போலீசார் வரவில்லை. போலீசார் வந்ததாகவும், கையெழுத்து பெற்றதாகவும் கூறியவிபரங்கள் எனக்கு சுய நினைவு வந்து என்னுடைய அம்மா கூறியதால் தான் எனக்கு தெரியும். குமந்தாபுரமான எங்கள் ஊருக்கு செல்லவேண்டுமென்றால்

வடக்கே உள்ள பஸ் ஸ்டாப்பில் இருந்து செல்லவேண்டும். 18 நாட்கள் மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றேன். ம.சா.ஆ.2 ஆன விபத்து பதிவேட்டில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று மருத்துவர் கூறியிருக்கிறார் என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் பெயர், அப்பா பெயர், விலாசம் போன்றவை எனக்கு தெரியாது. புகாரில் இந்த விபரங்களை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. நான் விபத்து சமயத்தில் ஆட்டோவில் இருந்து இறங்கி பஜாருக்கு சென்றுகொண்டிருந்தேன். நானும், எனது அம்மாவும் இறங்கி நின்றுகொண்டிருந்த போது விபத்து நடந்தது. ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் என்னுடைய அம்மா குமார் டீக்கடை அருகே நின்றுபேசிக்கொண்டிருந்தார் என்று கூறப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். இந்த எதிர்மனுதாரர் சாலை விதிகளை கடைபிடித்து மக்கள் கூட்டம் அதிகமாக இருந்ததாலும், அந்த வாகனத்தில் தண்ணீர் டேங்க் தண்ணீருடன் இருந்ததாகவும், அவர் மெதுவாக பேருந்து நிலையத்தில் உள்ள சூர்யா டீக்கடைக்கு கொண்டு சென்றுகொண்டிருந்ததாகவும், நான் தான் சாலை விதிகளை கடைபிடிக்காமல் கவனமில்லாமலும், இந்த வாகனத்தில் வந்து விழுந்திருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு முழு காரணமும் நான் தான் என்றால் சரியல்ல. விபத்து நடந்த காலமானது கொரானா காலம் என்பதால் எதிர்மனுதாரர் அவரது வாகனத்தின் காப்பீட்டை புதுப்பிக்கவில்லை என்பதாலும், மத்திய அரசு கொரானா காலத்தில் காப்பீட்டை நீட்டிப்பதற்கு உத்தரவு வழங்கப்பட்டிருந்தது என்பதாலும், மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வின் போது ஆய்வறிக்கையில் காப்பீடு என்ற காலத்தில் கோவிட்19 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதாலும் இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. என் மீது பொய்யான வாக்குமூலத்தைப் பெற்று பொய்யாக இந்த எதிர்மனுதாரர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. இந்த எதிர்மனுதாருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றும், சாலை விதிகளை கடைபிடித்து மெதுவாகத்தான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றும், இந்த விபத்திற்கு எதிர்மனுதாரர் எவ்வித காரணமும் இல்லை என்றாலும் சரியல்ல. என்னுடைய வயது, வருமானம், வேலையைக் காண்பிக்கும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.10 முதல் 12 வரையான ஆவணங்களை மருந்துகள் வாங்கியதற்கான மருந்துச் சீட்டுகள் மட்டுமே உள்ளது என்றும், இந்த மருந்துகள் வாங்கியதற்கு

மருத்துவர் வழங்கிய மருத்துவக் குறிப்பு இல்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு இந்த மருந்துகளை வாங்கவில்லை என்றால் சரியல்ல.

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2024.01.31 17:53:24 +0530